## சுருக்கம்

பணியமைப்பு - கூட்டுறவுத் தணிக்கைத் துறை - கருணை அடிப்படையில் பணிநியமனம் - திருமதி.ந.கன்னிகா புவனா (பெயர் மாற்றத்திற்குப்பின்) அவர்கள் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்தல் மற்றும் பணிநியமன நாள் முதல் பணப்பலன்கள் வழங்குதல் - விதிகள் தளர்வு செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

## நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை

அரசாணை (நிலை) எண்: 66

நாள்: 06-03-2023.
சுபகிருது, மாசி-22,
திருவள்ளுவர் ஆண்டு-2054.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.2)த் துறை, நாள் 30.08.2010.
2. அரசாணை (நிலை) எண்.96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1)த் துறை, நாள் 18.06.2012.
3. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் செயல்முறை ஆணை ந. க.எண்.5945/2018/அபஅ.3, நாள் 03.10.2019.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1)த் துறை, நாள் 23.01.2020.
5. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கடித ந.க.எண்.5945/2018/அபஅ.3, நாள் 17.02.2021.

.....

## ஆணை

மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

அ) கோயம்புத்தூர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கூட்டுறவுத் தணிக்கை அலுவலராகப் பணிபுரிந்த போது திரு.வெ.நடராஜன், அவர்கள் பணியிடையில் 26.07.2004ல் இயற்கை எய்தியதனைத் தொடர்ந்து, அவரின் முதல் வாரிசும், மனைவியுமான திருமதி.ந.சரஸ்வதி தனது மகள் திருமதி.ந.கன்னிகா புவனா (பெயர் மாற்றத்திற்குப் பின்)-க்கு கருணை அடிப்படையில் பணி வழங்கக்கோரி 16.03.2006ல் சமர்ப்பித்த விண்ணப்பமானது கோயம்புத்தூர் கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநரின் பரிந்துரையுடன் ந.க.எண்.1827/2006/ப.1, நாள்.16.03.2006-ன் வழி, கூட்டுறவுத் தணிக்கை இயக்ககத்தில் 20.03.2006 அன்று பெறப்பட்டது.

ஆ) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தனியரின் விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டிற்குள் பெறப்பட்டதாலும், தனியர் விண்ணப்பம் அளித்த நாளில் குறைந்தபட்ச வயதான 18 வயதினை (பிறந்த நாள் 02.01.1984) பூர்த்தி செய்ததாலும், மேலும் தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் விதி 29-ன்படி, இளநிலை உதவியாளருக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் (10) வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்ததாலும், தனியருக்கு 18.02.2008 அன்று திருமணம் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி அனைத்து நிபந்தனைகளையும் தனியர் பூர்த்தி செய்ததாலும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வழி தனியர் திருமதி.ந.கன்னிகா புவனா அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது.

இ) இதனைத் தொடர்ந்து தனியர் 09.10.2019 முற்பகல் முதல் கூட்டுறவுத் தணிக்கை இணை இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலத்தில் பணியில் சேர்ந்து, நாளது தேதி வரை தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

ஈ) மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஆட்சேபணைக் கடிதங்கள் மற்றும் உறுதிமொழிக் கடிதங்கள் தனியர் பணிநியமனத்திற்கு முன் பெறப்படாத நிலையில், தற்போது தனியரின் உறுதிமொழிக் கடிதம் மற்றும் திருமணம் பதிவு செய்ததற்கான பதிவுத்துறையின் கடிதம் பெறப்பட்டுள்ளது.

உ) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசுப் பணியாளர்களின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க வழிவகை இருப்பினும், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 15 II-ல் வழிவகை இல்லாததால், இதனை தனியருக்கு ஏதுவாக தளர்வு செய்தும், தனியருக்கு பணப்பலன்கள் பணிநியமன நாள் முதல் வழங்குவதற்கு ஏதுவாக சட்டப்பிரிவு 28 (2)-யையும் தளர்வு செய்தும் மற்றும் தனியரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்ததற்கு பின்னேற்பு அனுமதி ஆணை வழங்குமாறு கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. அரசு மேற்படி கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ந.கன்னிகா புவனா, இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 09.10.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்வதற்கு மற்றும் பணப்பலன்கள் பணிநியமன நாள் முதல் வழங்குவதற்கு ஏதுவாக முறையே தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15 மற்றும் 28 (2) ஆகிய விதிகளை தளர்வு செய்து ஆணையிடுகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.கு.எண்.5398/க்யூ-1/2021, நாள்:22.03.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.கு.எண்.35830/ஜி2/2021, நாள்:06.12.2021 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.முருகானந்தம்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>

கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், சென்னை -35.
திருமதி.ந.கன்னிகா புவனா, இளநிலை உதவியாளர்.
(கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை -09.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை -09.
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

// பதிவஞ்சல் மூலம் //

**பிரிவு அலுவலர்.**

கூட்டுறவு தணிக்கை இயக்ககம்,
சென்னை-35.
நாள்: 10.03.2023.

மே.அ.ந.க.5945/2018/அபஅ3

// தொடர்புறுத்தப்படுகிறது //

ஒம்/- இரா.லட்சுமி,
இயக்குநர்.

இயக்குநருக்காக.

பெறுநர்:
1. திருமதி.ந.கன்னிகா புவனா, இளநிலை உதவியாளர்.
(கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், கோவை மண்டலம் மூலமாக இவ்வரசாணையை தனிநபருக்கு வழங்கியும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டும் அதற்கான ஒப்புதல் மற்றும் விவரங்களை தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது).
2. கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், கோவை மண்டலம்.

நகல்:
1. இயக்ககம் அபஅ2 பிரிவு.
2. இருப்புக்கோப்பு அபஅ3 பிரிவு.

கூட்டுறவு தணிக்கை
இணை இயக்குநர் அலுவலகம்
கோயம்புத்தூர் மண்டலம்
கோயம்புத்தூர்.

ந.க 4402/2019/அமஅ                    நாள்: 17.03.2023

|| தொடர்புறுத்தப்படுகிறது ||

17/3/23

கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர் (பொறுப்பு)
கோயம்புத்தூர் மண்டலம்
கோயம்புத்தூர்.

17/03/2023

17/03/2023

பெறுநர்:

✓ திருமதி. ந. கன்னிகாபுவனா,
இளநிலை உதவியாளர்
(இவ்வாணையினைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது)

நகல்:

இருப்புக்கோப்பு.